செ.வெ.எண்.55 நாள் : 27.03.2019

# 100 சதவீதம் வாக்குப்பதிவு குறித்து பள்ளி மாணவ, மாணவியர்களின் ஸ்கேட்டிங் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

இந்திய தேர்தல் ஆணையம் வரும் **நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2019** முன்னிட்டு தேர்தலில் 100 சதவீதம் மக்கள் வாக்களிக்க வேண்டுமென வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவிற்கிணங்க அரியலூர் மாவட்டம், அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கில் பள்ளி மாணவ, மாணவியர்கள் மூலம் தேர்தல் விழிப்புணர்வு ஸ்கேட்டிங் பேரணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் கொடியசைத்து, துவக்கி வைத்தார்கள்.

மேலும், பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த 75-க்குமேற்பட்ட மாணவ, மாணவியர்கள் ஸ்கேட்டிங் மூலம் பேரணியாக சென்று பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், தேர்தல் சம்மந்தமான 100 சதவீதம் வாக்களிப்போம், வாக்களிப்பது நமது ஜனநாயக கடமையாகும், எந்தவொரு வாக்காளரும் விடுபடக்கூடாது போன்ற விழிப்புணர்வு அடங்கிய பதாகைகள் ஏந்தி இப்பேரணி அரியலூர் விளையாட்டு அரங்கிலிருந்து அண்ணாசிலை, தூய மேரி பள்ளி வழியாக சத்திரம் சென்று மீண்டும் அரியலூர் விளையாட்டு அரங்கில் முடிவுற்றது.

இந்நிகழ்ச்சியில், அரியலூர் கோட்டாட்சியர் நா.சத்தியநாராயணன், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.ரவிசந்திரன், வட்டாட்சியர் கதிரவன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அலுவலர் ஜெயகுமார் ராஜா மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்கள், அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**